

கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருப்பூர் தெற்கு மாவட்டம், குடிமங்கலம் மேற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் ஒன்றிய செயலாளர் அடிவள்ளி எம்.எஸ்.முரளி ஏற்பாட்டில் மாவட்டக் கழக பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி தலைமையில் நடைபெற்ற இரத்ததான முகாம், புகைப்படக் கண்காட்சிகளை கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் துவக்கி வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கினர். இதில் அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், மா.உமாபதி, சூர்யா வெற்றிகொண்டான், இரா.ஜெயராமகிருஷ்ணன், திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி உள்பட பலர் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம், ராயக்கோட்டை மற்றும் ஓசூரில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பாக, மகளிர்களுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் 2ம் கட்டத்தின் கீழ், மகளிர்க்கு உரிமைத் தொகைக்கான வங்கி பற்று அட்டைகளை உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி வழங்கினார். உடன், கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் பிரகாஷ், மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார், தளி சட்டமன்ற உறுப்பினர் ராமச்சந்திரன், ஓசூர் மாநகராட்சி மேயர் சத்யா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், மாநில இளைஞரணி துணை செயலாளர் சீனிவாசன், மாநில கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை துணைச் செயலாளர் மாதேஸ்வரன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

## திருவெறும்பூர் குண்டூர் 100 அடி சாலையில்

# குதிரைப் பந்தயம் : அன்பில் மகேஷ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார்!

திருச்சி, ஜன. 9 -

திருச்சி திருவெறும்பூர் அருகே உள்ள குண்டூர் 100 அடி சாலையில், தமிழ்நாடு மாநில குதிரை உரிமையாளர்கள் மற்றும் சாரதிகள் நலச்சங்கத்தின் சார்பில் முதலாம் ஆண்டு குதிரை பந்தயம் நடந்தது.

இந்த போட்டியினை தமிழக பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கொடியசைத்து துவக்கி வைத்தார்.



இந்த போட்டியின் போது குதிரை ஒன்று மற்றும் இரண்டு பிரிவுகளிலும் அளவு குதிரை 43 மற்றும் 45 ஆகிய பிரிவுகளிலும், நடு குதிரை மற்றும் பெரிய குதிரை என ஆறு பிரிவுகளில் குதிரை பந்தயம் நடைபெற்றது.

புதுக்குதிரை ஒன்றுக்கு மற்றும் இரண்டிற்கு முதல் பரிசு ரூ20 ஆயிரம் இரண்டாவது பரிசு ரூ15 ஆயிரம், மூன்றாவது பதிவு ரூ12ஆயிரம் நான்காவது பதிவு ரூ10 ஆயிரம்,

43 அளவு குதிரை 7மைல் தூரம் முதல் பரிசு ரூ25ஆயிரம், இரண்டாவது பரிசு ரூ 20 ஆயிரம், மூன்றாவது பரிசு ரூ15 ஆயிரம், நாலாவது பரிசு ரூ 12 ஆயிரம் பரிசு வழங்கப்பட்டது.

45 அளவு குதிரை 8மைல் தூரம் முதல் பரிசு ரூ30 ஆயிரம், இரண்டாவது பரிசு ரூ25 ஆயிரம் மூன்றாவது பரிசு ரூ20 ஆயிரம் நான்காவது பரிசு ரூ12 ஆயிரம் வழங்கப்பட்டது.

நடு குதிரை 9 மைல் தூரம் போட்டியில் முதல் பரிசு ரூ40 ஆயிரம் இரண்டாவது பரிசு ரூ30 ஆயிரம் மூன்றாவது பதிவு ரூ20ஆயிரம், நான்காவது பரிசு ரூ13 ஆயிரம் வழங்கப்பட்டது.

பெரிய குதிரை 10 மைல் தூரம் போட்டியில் முதல் பரிசு ரூ50 ஆயிரம் இரண்டாவது பரிசு ரூ 40 ஆயிரம் மூன்றாவது பரிசு ரூ30 ஆயிரம் நான்காவது பரிசு ரூ15 ஆயிரம் வழங்கப்பட்டது.

போட்டியில் சீறிப் பாய்ந்து வெற்றி பெற்ற குதிரைகளுக்கு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கோப்பையும் ரொக்க பரிசினையும் வழங்கினார்.

ஒன்றிய கழகச் செயலாளர்கள் கங்காதரன் மற்றும் கழக நிர்வாகிகள் பொது மக்கள் விளையாட்டு ஆர்வலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர் .

# புதுக்கோட்டை மாவட்டம் தச்சங்குறிச்சியில், ஜல்லிக்கட்டுப் போட்டி!

## அமைச்சர்கள் எஸ்,ரகுபதி – சிவ,வீ,மெய்யநாதன் மற்றும் கே,கே,செல்லப்பாண்டியன் துவக்கி வைத்தார்கள்!

புதுக்கோட்டை, ஜன. 9 -

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை வட்டம், தச்சங்குறிச்சியில், ஜல்லிக்கட்டுப் போட்டியினை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா தலைமையில் 03.01.2026 அன்று கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

இந்நிகழ்வில், இயற்கை வளங்கள் துறை அமைச்சர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆகியோர் முன்னிலையில், மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் "ஜல்லிக்கட்டு உறுதிமொழியினை" அனைத்து மாடுபிடி வீரர்களும் ஏற்றுக்கொண்டனர்.

ஜல்லிக்கட்டு உறுதி மொழியான, "எங்கள் தமிழ்நாட்டின் பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டை கொண்டாடிடவும், நமது கலாச்சாரத்தையும், பண்பாட்டையும், பேணிக்காப்போம் என்றும், விளையாட்டில் ஈடுபடும் காளைகளுக்கு எவ்வித ஊறும் செய்யமாட்டோம் என்றும், வீரர்களான நாங்கள் சிறந்த நெறிமுறைகளை பின்பற்றுவோம் என்றும், இவ்விளையாட்டில் பங்கேற்கும் காளைகளுக்கும், வீரர்களுக்கும் சிறுதீங்கும் நேராமல் விளை யாடுவோம் என்றும் உளமார உறுதி கூறுகிறோம்" என்ற ஜல்லிக்கட்டு உறுதிமொழியினை, மாவட்ட ஆட்சித்தலைவர் வாசிக்க, அதனை பின்தொடர்ந்து, அனைத்து மாடுபிடி வீரர்களும் ஏற்றுக்கொண்டனர்.

தமிழகத்தில் இந்த ஆண்டிற்கான முதல் ஜல்லிக்கட்டுப் போட்டியாக தச்சங்குறிச்சியில் ஜல்லிக்கட்டுப் போட்டி துவக்கி வைக்கப் பட்டுள்ளது. இந்த ஜல்லிக்கட்டுப் போட்டியில் சுமார் 300க்கும் மேற்பட்ட மாடு பிடி வீரர்கள் மற்றும் 600 காளைகள் பங்கேற்று சிறப்பாக ஜல்லிக்கட்டுப் போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் ஆம்புலன்ஸ் மற்றும் பணியாளர்கள் அடங்கிய மருத்துவக் குழுவினர்களும் பணியாற்றி வருகின்றனர்.

இப்போட்டியில் கலந்து கொள்ளும் வீரர்கள் மற்றும் காளைகள் முழு மருத்துவ பரிசோதனைக்கு பிறகே அனுமதிக்கப்பட்டனர். மேலும் இந்த ஜல்லிக்கட்டுப் போட்டியானது அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே. செல்லப்பாண்டியன் , கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, வருவாய் கோட்டாட்சியர் பா.ஐஸ்வர்யா, துணைக் காவல் கண்காணிப்பாளர் பிருந்தா, கந்தர்வக் கோட்டை வட்டாட்சியர். எம்.ரமேஷ், கந்தர்வக் கோட்டை வட்டார வளர்ச்சி அலுவலர் பி. சேகர், எஸ்.பார்த்திபன், முன்னாள் ஊராட்சிமன்றத் தலைவர் எம்.பரமசிவம், கீரை தமிழ் ராஜா, மா.தமிழ் அய்யா, இளைய ராஜா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.



சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம், பாவடி நகரவை மகளிர் மேல்நிலைப்பள்ளியில் 114 மாணவியர்களுக்கு மிதிவண்டிகளை நேற்று முன்தினம் (07.01.2026) வழங்கினார். உடன், சேலம் மாநகராட்சி மேயர் ஆ.ராமச்சந்திரன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திருமதி நே.பொன்மணி, முதன்மை கல்வி அலுவலர் திருமதி ப.மகேஸ்வரி, அம்மாப்பேட்டை மண்டல தலைவர் கே.டீ.ஆர். தனசேகரன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.



அரியலூர் மாவட்ட அவசர செயற்குழுக் கூட்டம் கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி அரியலூர் ரிதன்யா மஹாலில் நடைபெற்ற கூட்டத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் உரையாற்றினார். உடன் கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், அனைத்து அணி பொறுப்பாளர்கள் பலரும் கலந்துகொண்டனர்.



தருமபுரி கிழக்கு மாவட்டம் அரூரில் திராவிடப் பொங்கல் விழாவையொட்டி நடைபெறும் கிரிகெட்,வாலிபால்,கபாடி போட்டிகளை தருமபுரி கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர், வழக்கறிஞர்.ஆ.மணி எம்.பி. தலைமையேற்று துவக்கி வைத்தார்.உடன் மாவட்ட துணை செயலாளர் சி.கிருஷ்ணகுமார்,நகர செயலாளர் முல்லை.ரவி,நகராட்சி தலைவர் இந்திராணி தனபால்,ஒன்றிய செயலாளர்கள் ஆர்.வேடம்மாள்,கோ. சந்திரமோகன்,சி.தென்னரசு,சௌந்தரராசு,நகராட்சி துணைத் தலைவர் சூர்யா.தனபால்,செந்தாமரைக்கண்ணன்,உள்ளிட்ட திமுகவினர்,மற்றும் 200 க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டனர்.



கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49வது பிறந்தநாளை முன்னிட்டு கோவை மாநகர் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் லாரா பிரேம் தேவ் ஏற்பாட்டில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர், வீராங்கனைகளுக்கு பரிசுகளை கோவை மாநகர் மாவட்டக் கழக பொறுப்பாளர் துரை.செந்தமிழ் செல்வன் வழங்கினார். இதில் கழக மாணவர் அணி செயலாளர், வழக்கறிஞர் இரா.ராஜீவ்காந்தி, டாக்டர் ஆர்.மகேந்திரன், கோட்டை அப்பாஸ், தளபதி இளங்கோ, தமிழ் செல்வன், வி.ஜி.கோகுல், சோமு சந்தோஷ், இலா.தேவசீலன், தனபால், க.மணிகண்டன், கோவை அருண், மசூத், பாலமுருகன், முனியம்மாள், சிங்கை பிரபாகரன், சுரேஷ் , நா.பாபு பாபு, அர்ஜுனன் , அன்னம்மாள் , கனிமொழி உள்பட பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மைய வளாகத்தில் கல்லூரி மாணவர்களின் திறன் வளர்ச்சி மற்றும் டிஜிட்டல் முன்னேற்றத்திற்காக 10 இலட்சம் மடிக்கணினிகள் வழங்கும் "உலகம் உங்கள் கையில்" என்னும் மாபெரும் திட்டத்தை தொடங்கி வைத்ததையொட்டி, கோயம்புத்தூர் மாவட்டம், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா அரங்கத்தில் 4,320 கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், கோவை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் ஆகியோர் வழங்கினர். இதில் மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமசந்திரன், ஆணையாளர் மா.சிவகுருபிரபாகரன், துணை மேயர் ரா.வெற்றிச்செல்வன், மகளிர் திட்டம் திட்ட அலுவலர் மதுரா, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.கீதாஞ்சலி, மேற்கு மண்டல குழுதலைவர் தெய்வயானை தமிழ்மறை, பணிகள் குழு தலைவர் சாந்தி முருகன், மாமன்ற உறுப்பினர் சங்கர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.